NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
NOVEMBER 2013

# TAMIL HOME LANGUAGE: PAPER II

Time: 2½ hours | 80 marks

---

**PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY**

1. This question paper consists of 13 pages. Please make sure that your question paper is complete.
2. Read the instructions to each question carefully.
3. Answer all questions taking note of any choices given.
4. All answers must be in **TAMIL**.

---

IEB Copyright © 2013 

## பகுதி A

கொடுக்கப்பட்டுள்ள நான்கு கவிதைகளில் ஏதேனும் இரண்டைப்பற்றி [2] விடை தருக:

அதாவது 10 + 10= 20 + 10 [கற்பிக்காத கவிதை] = 30

கீழ்வரும் கவிதையை நன்றாக படித்து பின்வரும்

கேவிகளுக்கு சரியான விடை தருக :

### தாயின் மணிக்கொடி

பல்லவி

தாயின் மணிக்கொடி பாரீர் - அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்! (தாயின்)

1 ஓங்கி வளர்ந்ததோர் கம்பம் - அதன்
உச்சியின் மேல் 'வந்தே மாதரம்' என்றே
பாங்கின் எழுதித் திகழும் - செய்ய
பட்டொளி வீசிப் பறந்தது பாரீர்! (தாயின்)

2 பட்டுத் துகிலென லாமோ? - அதில்
பாய்ந்து சுழற்றும் பெரும்புயற் காற்று
மட்டு மிகுந்தடித் தாலும் - அதை
மதியாதவ் வுறுதிகொள் மாணிக்கப் படலம் (தாயின்)

3 இந்திரன் வச்சிரம் ஓர்பால் - அதில்
எங்கள் துருக்கர் இளம்பிறை ஓர்பால் (தாய்)
மந்திரம் நடுவுறத் தோன்றும் - அதன்
மாண்பை வகுத்திட வல்லவன் யானோ? (தாயின்)

4 கம்பத்தின் கீழ்நிற்றல் காணீர் - எங்கும்
காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்
நம்பற் குரியர் அவ்வீரர் - தங்கள்
நல்லுயிர் ஈந்தும் கொயினைக் காப்பார் (தாயின்)

1. <u>தாயின் மணிக்கொடி</u>

1.1 கொடிட்ட இடங்களில் சரியான சொற்களால் நிருப்புக :

1.1.1 அதன் உச்சியன் மேல்............................................ (1)

1.1.2 அதில் பாயந்து சமுற்றும் பெரும்புயற்.............................. (1)

1.1.3 ........................................................வச்சிரம் ஓர்பால். (1)

IEB Copyright © 2013

1.2 சரியான விடை எழுதுக :

1.2.1 இக்கவிதையை எழுதியவர் யார்? (1)

1.2.2 எது ஓங்கி வளர்ந்தது ? (1)

1.2.3 எது வீசிப் பயந்தது? (1)

1.2.4 பெரும்புயற் காற்று என்ன செய்தது ? (1)

1.2.5 எது நடுவுறத் தோன்றும் ? (1)

1.2.6 சரியாக எழுதுக ; உம் : ச் உசின் யி = உச்சியின்

(a) யின் தா (1)

(b) கா ழுற் (1)

அல்லது OR

1.3 மேற்கண்ட கவிதையைப் பற்றி 10-12 வரிகள் எழுதுக. (10)

2. கீழ்வரும் கவிதையை நன்றாக படித்து சரியான விடை

எழுதுக :

மாயக் குயிலோர் மரக்கிளையில் வீற்றிருந்தே
பாயும் விழிநீர் பதைக்கும் சிறியவுடல்
விம்மிப் பரிந்துசொலும் வெந்துயர்ச்சொல் கொண்டதுவாய்
அம்மவோ! மற்றாங்கோர் ஆண்குரங்கு தன்னுடனே
ஏதேதோ கூறி இரங்கும் நிலைகண்டேன்
தீதேது? நன்றேது? செய்கைக் தெளிவேது?
அந்தக் கணமே அதையும் குரங்கினையும்
சிந்தக் கருதி உடைவாளில் கைசேர்ந்தேன்
கொன்றுவிடு முன்னே குயிலுரைக்கும் வார்த்தைகளை
நின்று சற்றே கேட்பதற்கென் நெஞ்சம் விரும்பிடவும்
ஆங்கவற்றின் கண்ணில் அகப்படா வாறருகே
ஓங்கு மரத்தின்பால் ஒளிந்துநின்று கேட்கையிலே
பேடை குயிதனைப் பேசியது 'வானரரே!
ஈடறியா மேன்மையழ கேய்ந்தவரே! பெண்மதான்
எப்பிறப்புக் கொண்டாலும் ஏந்தலே! நின்னழகைத்
தப்புமோ? மையல் தடுக்கும் தரமாமோ?
மண்ணிலுயிர்க் கெல்லாம் தலைவரென மானிடரே

2.1 இப்பாட்டை எழுதியவர் யார் ? (1)

2.2 எந்த விலங்கைப்பற்றி எழுதியுள்ளது ? (1)

2.3 எந்த பெண்மணியைப் பற்றி எழுதிள்ளது ? (1)

2.4 கோடிட்ட இடங்களில் சரியான சொற்கள் எழுதுக :

2.4.1 மாயக் குயிலோர்....................................வீற்றிருந்தே. (1)

2.4.2 ஏதேதோ ................................இரங்கும் நிலைகண்டேன் ? (1)

2.4.3 தப்புமோ ? மையால்..................தரமாமோ ? (1)

2.5 மறுபிறப்பில் யார் குயிலாக பிறந்தது ? (1)

2.6 முன்னே [9 வது வரி] என்ற சொல்லுக்கு எதிர்சொல் தருக. (1)

2.7 குரங்களைப் பற்றி 3-4 வரிகள் எழுதுக (2)

அல்லது OR

2.8 சின்ன குயிலியின் கதையைப் பற்றி 10-12 வரிகள் எழுதுக. (10)

IEB Copyright © 2013

3. கீழ்வரும் கவிதையை நன்றாகப் படித்து சரியான விடை தருக

## வேற்றுமை இல்லை
(பாட்டு - தேசியகவி பாரதியார்)

வெள்ளை நிறத்தொரு பூனை - எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்!

பிள்ளைகள் பெற்றதப் பூனை -அவை
பேருக் கொருநிற மாகும்!

சாம்பல் நிறமொரு குட்டி-கருஞ்
சாந்து நிறமொரு குட்டி!

பாம்பு நிறமொரு குட்டி - வெள்ளைப்
பான் நிறமொரு குட்டி!

எந்த நிறமிருந் தாலும் - அவை
யாவும் ஒரேதர மன்றோ?

இந்த நிறம்சிறி தென்றும் - இஃது
ஏற்றமென் றும்சொல்ல லாமோ?

வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால் - அதில்
மானுடர் வேற்றுமை இல்லை

எண்ணங்கள் செய்கைகள் எல்லாம் - இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்!

3.1 கோடிட்ட இடங்களில் தகுந்த சொல்லால் நிரப்புக

3.1.1 பூனை எங்கள் வீட்டில் __________ கண்டீர் (1)

3.1.2 __________ பெற்றதப் பூனை (1)

3.1.3 சாம்பல் __________ குட்டி (1)

3.2 கீழ்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதுக.

3.2.1 இக்கவிதை எழுதியவர் யார்? (1)

3.2.2 வெள்ளை நிற பூனை எங்கே வளருது? (1)

3.2.3 அப்பூனை என்ன பெற்றது? (1)

3.3 உண்மை அல்லது உண்மை அல்ல என்று கூறுக.

3.3.1 வெள்ளை நிற பூனை காட்டில் வளருது (1)

3.3.2 பூனை பிள்ளைகள் பெற்றது? (1)

3.3.3 சிவப்பு நிற குட்டி ஒன்று இருந்தது (1)

3.3.4 பால் நிற குட்டி சிறந்தது (1)

**அல்லது OR**

3.4 பூனைகளையும் பூனைக்குட்டிகளையும் பற்றி 10 – 12 வரிகள் எழுதுக (10)

IEB Copyright © 2013

## 4. திருக்குறள்

4.1 **கோடிட்ட இடங்களில் தகுந்த சொல்லால் நிரப்புக.**

4.1.1 அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
________ முதற்றே உலகு. (1)

4.1.2 மலர்மிசை ஏகினான் மாண்அடி __________
நிலமிசை நீடு வாழ்வார். (1)

4.1.3 பிறவிப் பெருங்கடல் நீந்துவர், நீந்தார்
________ அடி சேராதார். (1)

4.1.4 வேண்டுதல் வேண்டாமை இலான்அடி __________
யாண்டும் இடும்பை இல (1)

4.1.5 கற்றதனால் ஆய பயன்என்கொல் வால் அறிவன்
________ தொழா அர் எனின். (1)

4.2 **முடிவு செய்க:**

4.2.1 காலத்தினால் செய்த நன்றி சிறிதுஎனினும் (1)

4.2.2 இருள்சேர் இருவினையும் சேரா, இறைவன் (1)

4.2.3 பொறிவாயில் ஐந்து அவித்தான் பொய்தீர் ஒழுக்க (1)

4.3 திருக்குறளில் எத்தனை பகுதிகள் உள்ளன? (1)

4.4 முதல் பகுதி எது? (1)

**அல்லது OR**

4.5 திருக்குறளில் வருகின்ற கடவுல் வாழ்த்துவைப் பற்றி
10 - 12 வரிகள் எழ்துக (10)

IEB Copyright © 2013 

5. <u>கற்பிக்காத கவிதை</u> **(UNSEEN POEM)**

கீழ்வரும் கவிதையை நன்றாகப் படித்து சரியான விடை தருக :

## ஆசிரியர் வாழ்த்து

என்னுயிர் மாணவர் முன்னாள்
இன்னுயிர் இனியர் இந்நாள் - கவிஞனாய்த்
தடம் பதிக்க முயல்கிறார் இளம்முனைவர்
தி. சேதுராமலிங்கம்.

என்ன சொல்வது ? எப்படிச் சொல்வது?
எவ்வளவு வளர்ந்து நிற்கிறார்? ஆச்சர்யமாய்
இருக்கிறது, சேது வா இது ? கண்ணுக்குத்
தெரிந்து குன்று ஒன்று மலையாய் வளர்கிறது,
மகிழ்ச்சியாய்த் தான் இருக்கிறது.

கடல் கடந்து வாழும் இவருக்கு அனுபவங்கள்
கவிதையாய்ப் பரிணமிக்கின்றன,
உற்றார் உறவினர்களைப் பிரிந்து, மனைவி
மக்களைப் பிரிந்து தொலைதூரம் சென்று வாழும்
தனிமை, கவிதைகளாய்ப் பிரவாகம் எடுக்கின்றன,
தனிமை தவிர்க்க தண்ணீர் தேடும் பலரிடையில்
இவர் மட்டும் வித்தியாசம் , தண்ணீராய்க் கவிதைகளைக்
கொட்டுகிறார்,

கடல்கடந்து சென்ற பலர் பணப்பைகளை நிரப்பும்
வேளையில் இவர் மட்டும் கவிதைகளாய் நிரப்புகிறார்.
"காலமெல்லாம் நீ வாழ்க" என்று எழுத்தறியா
இளமகனின் பிறந்த நாளில் கவிதையில் பொங்குவது
அருமை.

5.1 கோடிட்ட இடங்களில் சரியான சொற்களால் நிரப்புக.

5.1.1 என்னுயிர் _______________முன்னால் இன்னுயிர் (1)

5.1.2 ஆச்சர்யமாய் ______________ சேதுவா இது (1)

5.1.3 கடல்கடந்து சென்ற ___________பணப்பைகளை நிரப்பும் (1)

5.2 சரியான விடை தருக.

5.2.1 இக்கதையில் ஆசிரியர் பெயர் என்ன? (1)
5.2.2 எது மகிழ்ச்சியாய் இருக்கிறது? (1)
5.2.3 கவிதைகளைக் எப்படி கொடுக்கிறார்? (1)

5.3 எதிர்ச்சொல் தருக

5.3.1 பின்னால் (1)
5.3.2 சிலர் (1)

5.4 ஆண்பாலுக்கு பெண்பால் தருக

5.4.1 ஆசிரியர் (1)
5.4.2 மாணவன் (1)

**அல்லது OR**

5.5 **மேற்கண்ட கவிதையைப் பற்றி 10-12 வரிகள் எழுதுக.** (10)

**30 marks**

# பகுதி B

**கீழ்வரும் பகுதியைப் படித்துப் பிறகு சரியான விடை எழுதுக.**

**காப்பு**

**கொன்றை வேந்தன் செல்வ னடியிணை**
**என்று மேத்தித் தொழுவோ மியாமே.**

"கிட்டாதாயின் வெட்டென மற"
என்பது ஔவையின் திருவாக்கு.

**எண்ணும் எழுத்துங் கண்ணெனத் தகும்.**
**ஏவா மக்கள் மூவா மருந்து.**
**ஐயம் புகினுஞ் செய்வன செய்.**

1. **கோடிட்ட இடங்களில் தகுந்த சொல்லால் நிரப்புக.**

1.1 அன்னையும் பிதாவும் ______________ தெய்வம். (1)

1.2 ஆலயம் தொழுவது ______________ நன்று. (1)

1.3 இல்லறம் ______________ நல்லற மன்று. (1)

1.4 ஈயார் தேட்டை ______________ கொள்வர். (1)

2. **முடிவு செய்க:**

2.1 ஊருடன் பகைக்கின் ______________. (2)

2.2 எண்ணு மெழுத்துங் ______________. (2)

2.3 ஏவா மக்கள் ______________. (2)

2.4 ஐயம் புகினும் ______________. (2)

2.5 ஒருவனைப் பற்றி ______________. (2)

2.6 ஓதலி நன்றே ______________. (2)

2.7 ஔவியம் பேசுத ______________. (2)

2.8 அஃகமுங் காசுஞ் ______________. (2)

IEB Copyright © 2013

3. **பலரையும் பகைத்த பச்சையப்பன் என்ற கதையிலிருந்து சில கேள்விகள்:**

3.1 பச்சையப்பன் எங்கே வாழ்ந்திருந்தான்? (1)

3.2 அவனுக்கு வயது என்ன? (1)

3.3 அவன் ஊராரை எவ்வாறு மதித்தான்? (1)

3.4 அவன் தினமும் என்ன எண்ணினான்? (1)

3.5 எதிர்ச்சொல் தருக: பகைவன் (1)

## அல்லது/OR

4. பலரையும் பகைத்த பச்சையப்பன் என்ற கதையைப் பற்றி சுமார் 20-25 வரிகள் எழுதுக. (25)

**25 marks**

IEB Copyright © 2013

## பகுதி C : தங்கப் பதக்கம்

**கீழ்வரும் பகுதியைப் படித்துப் பிறகு சரியான விடை எழுதுக.**

**ஜெகன்:** என்னம்மா நீ எப்ப பார்த்தாலும் என்னைச் சந்தேகப்படுற. இப்ப நீ பணம் தரபோறியா? இல்லையா? நீ தரலேனா நான் பள்ளிக்கூடம் போக மாட்டேன்.

**லட்சுமி:** ஏண்டா அப்பா இருக்காருங்கிற பயமே உனக்கு இல்லாம போச்சி.

**ஜெகன்:** என்னம்மா அப்பா அப்பான்னு பயமுறுத்துற - அப்பா - பெரிய இவரு.

**லட்சுமி:** டேய் என்னடா சொன்ன? உங்க அப்பாகிட்ட சொல்லி நாக்குல சூடுபோட வைக்கிறேன். ராஸ்கல். இந்தா பணம் முளைக்கும்போதே. உனக்கு இவ்வளவு திமிரா? ராஸ்கல் போடா.

1. **கோடிட்ட இடங்களில் சரியான சொற்களால் நிரப்புக.**

   1.1 இப்ப நீ ____________ தரபோறியா, இல்லையா? (1)

   1.2 ____________ பெரிய இவரு. (1)

2. **சரியான விடை தருக.**

   2.1 இந்த நாடகத்தின் கருத்து என்ன? (2)

   2.2 ஜெகன் ஏன் வீட்டை விட்டு ஓடிவிட்டான்? (2)

   2.3 பல ஆண்டுகளாக ஜெகன் எங்கே இருந்தான்? (3)

   2.4 காவல் அதிகாரி, லட்சுமி, ஜெகன் - இவர்களைத் தவிர, வேறு மூன்று கதாபாத்திரங்கள் யார்? (3)

   2.5 இந்த நாடகத்தில் விமலா யார்? (2)

   2.6 மேற்கண்ட வரிகளுக்கு ஒரு தலைப்பு தருக. (2)

   2.7 **எதிர்ச்சொல் தருக:**

   2.7.1 உண்டா? (1)

   2.7.2 சிறிய (1)

IEB Copyright © 2013

2.8 பன்மை தருக:

2.8.1 பள்ளிக் கூடம் (1)

2.8.2 நீ (1)

2.9 காவல் அதிகாரியின் மகன் ஜெகனைப் பற்றி 4-5 வரிகள் எழுதுக. (5)

**அல்லது OR**

3. காவல் அதிகாரி சௌத்திரியைப் பற்றியும் அவர் மனைவி லட்சுமியைப் பற்றியும் 20-25 வரிகள் எழுதுக. (25)

**25 marks**

மொத்த மதிப்பெண்கள் **80**

**Total: 80 marks**

IEB Copyright © 2013